# <u>நவ கோள்களினால் இன்பமா ? துன்பமா ? பரிகாரம் செய்யலாமா ?</u>



சிவத்தமிழ் குகமணி தெ.தனபால்
ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சி ஆசிரியர்
**94449 58526.** Email:- thiruppalli@yahoo.com
www.pambanswamigal.org or pambanswamigal.net

உலகம் தோன்றியவுடன் இந்த மண்ணில் உயிர்களும் தோன்றின. பல்வேறு பிறவிகளை பெற்று நாம் இப்போது அடைவதற்கு அரிய பிறவியான மனிதப் பிறவியை அடைந்துள்ளோம். நமது தமிழ் அன்னை ஔவை பிராட்டி இதனை எவ்வாறு வருணித்தார்கள் என்றால், ''அறிது அறிது மனிடாய் பிறத்தல் அறிது, அதனினும் அறிது கூன், குருடு இன்றி பிறத்தல் அறிது'' என்று பலவாறு கூறியிருக்கின்றார்கள். நாம் எவ்வாறு இந்த மனிதப்பிறவியை அடைந்தோம் ? இதற்கு முன்பாக நாம் என்ன பிறவி எடுத்துள்ளோம் என்று நமக்கு தெரியாது. ஆனால் நம்முடைய மகான்களுக்கும், ஞானியர்களுக்கும் இந்த மனிதப்பிறவிக்கு முன்பு என்ன என்ன பிறவி உள்ளது என்றும், நாம் இந்த உடலை விட்டு நீங்கும் போது அடுத்து என்ன பிறவி கிடைக்கும் என்பதும் தெரியும். அதனால் தான் மாணிக்கவாசகர்ப் பெருமான் இயற்றிய பாடலான ''சிவபுராணத்தில்'' புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப் பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக் கல்லாய் மனிதாராய்ப் பேயாய்க் கணங்களாய் வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்'' என்று மிக அழகாகவும், மிகத் துல்லியமாகவும் உயிர்களின் பிறவித் தன்மையை கூறியுள்ளார்கள். ஆக இந்த மனிதப்பிறவியில் உள்ள நன்மை தீமைகள் நவ கோள்களால் நிர்ணயிக்கப்படுகின்றனவா ? அல்லது அந்த உயிர் சென்ற பிறவியில் செய்த கருமங்களின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றனவா ?

மனிதன் இந்த பூமியில் பிறந்து பல்வேறு இன்னல்களையும், துன்பங்களையும் அடைகின்றான். சிலர் இந்த பூமியில் பிறக்கும்போது மிகச் சிறந்த செல்வந்தர் மற்றும் தனவந்தர் குடும்பத்தில் பிறக்கின்றனர். ஆகையால் அவர்கள் செல்வச் செழிப்புடன் வளர்கின்றனர். சிலர் வறுமைக் கோட்டுக்குகீழே உள்ள குடும்பத்தில் பிறக்கின்றனர். அவர்கள் வறுமையிலே வாழ்ந்து வருகின்றனர். ஒரு காலகட்டத்திற்கு பிறகு அவர்களுடைய நிலை மாறுகின்றது. இது எவ்வாறு என்பதை தெய்வப்புலவர் திருவள்ளுவர் தன்னுடைய 103வது அதிகாரத்தில் உள்ள ''குடி செயல்வகை'' என்ற தலைப்பில் 1023 குறளில்

''குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான் முந் துறும்'' அதாவது யார் ஒருவர் தனது குடியை வளம்பெறச் செய்வோன் என்று செயல் படுவோனுக்குத் தெய்வம் தானே முன் வந்து உதவி செய்யும் என்று விளக்குகின்றார். மேலும்

''குடிசெய்வார்க்கு இல்லை பருவம் மடிசெய்து
மானம் கருதக் கெடும்'' அதாவது குடி செய்வார்க்கு உரிய காலம் என்று ஒன்று இல்லை. சோம்பல் கொண்டு, தன்மானம் கருதினால் குடிப் பெருமை கெடும் என்றும் விளக்குகின்றார். இதில் இருந்து நாம் ஒரு செய்தியை மட்டும் தெரிந்துக் கொள்ள வேண்டும் அதாவது நல்ல சிந்தனை, நல்ல செயல் புரிந்தால் வாழ்வில் நாம் உயர்வதற்கு தெய்வம் கூட வந்து உதவி செய்யும், அவ்வாறு இல்லாமல், தீய வழியில் சென்றால் நம்முடைய வாழ்க்கை ஒரு கேள்விக்குறியாக மாறிவிடும். ஆக ''நன்மையும், தீமையும் பிறர்தர வாரா'' அனைத்தும் நம் கையில் தான் உள்ளது.

நாம் செய்த பாவம், புண்ணியம் நம்முடன் வரும் என்று நம் முன்னோர்கள் கூறியிருக்கின்றார்கள். இதை எப்படி நாம் நம்புவது. இதற்கு உதாரணமாக நமது திருவள்ளுவர் கல்வி என்ற அதிகாரத்தில் 398வது குறளில் ஒரு விவரம் கூறியிருக்கின்றார். அதாவது,

**pdfMachine**
**Is a pdf writer that produces quality PDF files with ease!**
Produce quality PDF files in seconds and preserve the integrity of your original documents. Compatible across nearly all Windows platforms, if you can print from a windows application you can use pdfMachine.
Get yours now!

''ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து'' இதன் உட்பொருள் ஒரு பிறப்பில் ஒருவன் கற்ற கல்வி, அவனுக்கு எக்காலத்திலும் தொடர்ந்து இருந்து உதவும் தன்மையதாகும். இதில் இருந்து நாம் அறிந்து கொள்வது என்னவென்றால், எப்படி கல்வி ஒரு மனிதனுக்கு எல்லா காலத்திலும் உதவுகின்றதோ, அதுபோல் ஒரு மனிதன் செய்கின்ற செயல்களால் ஏற்படும் வினைப்பயன் எக்காலத்திலும் தொடர்ந்து இருக்கும். இந்த செயல்கள்தான் நம் கர்மாகவாக மாறிய பின்பு அடுத்த பிறவியில் அவை நவ கோள்களின் மூலமாக நமது ஜாதகத்தை நிர்ணயம் செய்கின்றன.

ஒரு சிலர் இப்பிறவியில் சிலர் சிறந்த அறிஞர்களாகவும், சிறந்த பாடகர்களாகவும், சிறந்த அரசியல் தலைவர்களாகவும் விளங்குகின்றார்கள். இதற்குக் காரணம் அவர்கள் இப்பிறவியில் படித்த கல்வி, கேள்வி மட்டும் அல்ல, இதற்கு முன்பு உள்ள பிறவிகளில் அதைப் பற்றிய ஞானம் இருந்ததால், இப்பிறவியில் அவர்களுக்கு அது துணை புரிகின்றது. இதற்கு உறுதுணையாக, அவர்கள் முற்பிறவியில் செய்த நல்ல செயல்களினால் அந்த கர்மாவின் பலனாக அவர்களுக்கு அந்த கிரகங்கள் உதவி புரிகின்றன.

என் நண்பரின் வாழ்க்கையில் நடந்த ஒரு உண்மைச் சம்பவத்தை உங்களிடம் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன். அவர் ஒரு பணியில் பல ஆண்டுகளாக பணிபுரிந்து கொண்டு வருகின்றார். அவருடைய ஜாதகத்தில் ஒரு கால கட்டத்தில் 10ல் குரு சஞ்சாரம் செய்கின்றார். இவ்வாறு குரு சஞ்சாரம் செய்தால் அவர் எந்த பதவியில் இருந்தாலும், அந்த பதவி ஏதோ ஒரு காரணத்தினால் பறிபோகும், அதனால் மிகுந்த துன்பமும், மன உளைச்சலும் உண்டாகும் என்பது ஜாதகத்தின் விதி. இந்த கிரகத்தின் கோச்சார விதி முடிந்தவுடன் மீண்டும் அந்த பதவி அவருக்கு கிடைக்கும் என்று கூறப்பட்டது. அதே போல் அவருடைய பதவி ஏதோ ஒரு காரணத்தினால் பறிக்கப்பட்டது, பின்பு 6 மாதங்கள் கழித்து மீண்டும் அப்பதவி வழங்கப்பட்டது. இந்த காலத்திற்கான சம்பளமும் வழங்கப்பட்டது.

ஆக நமது கர்மாக்கள் தான் கோள்கள் மூலமாக வடிவெடுத்து நம்முன் நிற்கின்றன. இந்த கர்மாக்கள் நமது வாழ்வில் பாதிக்காமல் இருக்க ஏதுனும் பரிகாரம் செய்ய வேண்டுமா ? என்ற அடுத்த கேள்வி நம் கண்முன் நிற்கின்றது. அது சரி. பரிகாரம் என்றால் என்ன என்பதை நாம் முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். ஒரு சில காலகட்டத்தில் நமது வாழ்வில் எற்படுகின்ற துயரச் செயல்களில் இருந்து வெளிப்பட ஒரு சிலர் ஆலயங்களுக்கு சென்று வழிபாடு செய்கின்றனர். இதனால் அந்த துன்பம் நம்மை விட்டு நீங்கி நன்மை பயக்கும் என்பது நாம் அறிந்த ஒன்று. இதற்கு உங்களுக்கு புரியும்படி ஒரு உதாரணம் சொல்ல விரும்புகின்றேன். நம்முடைய ஐம்பொறிகளில் கண் என்பது மிகவும் முக்கியமானது. நம்முடைய உடற் குறைபாடுகளினால் கண் தன் வலிமையை இழக்கின்றது. உடனே நாம் மருத்துவரை அணுகி அவருடைய ஆலோசனை பெயரில் கண்ணாடி அணிகிறோம். அதன் பிறகு நாம் முன்பு போல நமது பணிகளை செய்கின்றோம். இங்கே நாம் முக்கியமாக கவனிக்க வேண்டியது என்வென்றால் நாம் கண்ணாடி அணிந்து விட்டதால் நம்முடைய உடற் குறைபாடு நீங்கிவிட்டதா ? இல்லை என்றுதான் கூறவேண்டும். அது போலதான் பரிகாரங்களும். ஆக சடங்குகளும், ஆலய வழிபாடுகளும் நாம் கண்ணாடி அணிவது போலதான்.

அப்படியென்றால் நாம் இதில் இருந்து முழுமையாக வெளிவர இயலுமா ? அல்லது முடியாதா ? இதற்கு நிரந்தரமான தீர்வு என்ன ?

இந்த நிரந்தாமான தீர்வு ஏற்பட ஞானிகள் சொன்னபடி சென்றால் அந்த கோள்களினால் ஏற்படும் துயரச் செயல்கள் நம்மை சிறிது அளவும் நெருங்க முடியாது. ஆனால் இந்த கோள்களினால் ஏற்படும் நன்மை செயல்களை நாம் ஏற்றுக் கொள்ளுகின்றோம். நன்மையை ஏற்றுக்கொள்ளும் போது நாம் மிகவும் சந்தோஷம் அடைகின்றோம். ஆனால் துயரச் செயல்களை ஏற்றுக் கொள்ள நம் மனம் விரும்புவது இல்லை. ஆனால் ஒரு மனிதன் இன்பமும், துன்பமும் நம்முடைய முந்தைய வினைச் செயல்

**pdfMachine**
**Is a pdf writer that produces quality PDF files with ease!**
Produce quality PDF files in seconds and preserve the integrity of your original documents. Compatible across nearly all Windows platforms, if you can print from a windows application you can use pdfMachine.
Get yours now!

என்று புரிந்து கொண்டால் மனம் வெகு எளிதில் பதி பக்குவ நிலைக்கு வந்து விடும். பதி பக்குவம் என்பது ஞான மார்க்கத்தின் முதல் படிக்கட்டு ஆகும்.

இந்த ஞான மார்க்கத்தின் ஒரு பாதையாக நமது குருநாதர் அத்தியாச்சிரம சுத்தாத்துவித வைதிக சைவ சித்தாந்த ஞானபானு பாம்பன் ஸ்ரீமத் குமர குருதாச சுவாமிகள் இயற்றிய **6666** பாடலில் முதல் மண்டலத்தில் **60**வது தலைப்பாக வருவது ''சிவலோக சுந்தரமாலை'' என்ற ஒரு அற்புதமாகிய பதிகம் ஆகும் இப்பதிகம் **30** பாடல்களை கொண்டது.. இப்பதிகம் ''தரவுகொச்சகக்கலிப்பா'' என்ற தமிழ் இலக்கண முறைப்படி இயற்றப்பட்டது.

இந்த பதிகத்தில் நவ கோள்களால் ஏற்படுகின்ற துன்பங்களில் இருந்து விடுபட ''சிவலோக சுந்தரமாலை'' பதிகத்தை நாம் மனமுருகி பாடினால், அவற்றினால் வருகின்ற துன்பங்களில் இருந்து நிச்சயம் விடுபடலாம். சுவாமிகள் தன்னுடைய முதல் பாடலில். . . .

''பரிதிமதி செய் அரி பொன் பளிங்கு சனி பாம்புகளும்
விரிதலை நாள் வேளைகளும் மிகைஅடு நின் அடியவர்கட்கு
உரிய நலம் புரியுமன்றி ஒரு போதும் படர் புரியா
தெரியவரும் தொண்டிழைப்பார் சிவலோக சுந்தரனே''

இதன் பொருள் யாதெனில்:—

சிவலோக சுந்தரனே (முருகப் பெருமானே)**!** ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, இராகு, கேது என்னும் நவகோள்களும் ஒளியுடைய நாளில் உள்ள பலவகையான காலங்களும் (இராகு, எமகண்டம், குறிகை போன்றவை) பிறவி என்னும் பெரிய துன்பத்தை ஒழிக்கும் உன் அடியார்களுக்குத் தேவையான நன்மைகளைச் செய்யுமன்றி ஒருபோதும் துன்பத்தைச் செய்யமாட்டா. அறிவிலார்தாம் கோள்களினாலும் நாட்களில் வரும் கெட்ட காலங்களினாலும் தமக்குத் துன்பம் வாராதிருக்கப் பரிகாரம் செய்வார்கள். நாளும், கோளும் நல்லவர்களை என்செயும்**?** (நல்லவர்கள் என்பவர் முருகன் மீது அதீத பக்திக் கொண்டவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது)

சுவாமிகள் அடிக்கடி கூறுவது என்னவென்றால் ''காலம் கந்தன் கையில் உள்ளது'' என்று கூறுவார்கள். அதனை பின் வரும் பாடல் தெளிவாக விளக்குகின்றது.

''நாள்அவன்நீ நாள் அனைத்தும் நமன்உடைய நாள் எனவே
நீள்உளத்தில் நினையாது நிலை அழிந்து மதிமருண்டு
மாளும் மனக் குருடர் அதர்க்கு எனை அயலாய் வைத்துளபுத்
தேன் எனும் உன் அடிமறவேன் சிவலோக சுந்தரனே''

பொருள்:—

சிவலோக சுந்தரனே**!** காலமாக இருப்பவன் நீ. நாள் அனைத்தும் இயமனுடைய நாள் என்று பெரிய மனத்தில் நினைக்காமல் தன் நிலைகெட்டு அறிவு மயங்கி மரணம் அடையும் மனமுடைய அறியாமைக் குருடர் வழிக்கு என்னை அன்னியமாக வைத்துக் காத்தருளிய கடவுளான உன் திருவடியை என்றும் மறவேன் என்றும் இந்த ஞான மார்க்கத்தின் ஒரு பாதையாக நமது குருநாதர் அத்தியாச்சிரம சுத்தாத்துவித வைதிக சைவ சித்தாந்த ஞானபானு பாம்பன் ஸ்ரீமத் குமர குருதாச சுவாமிகள் நமக்கு எடுத்து உரைக்கின்றார்.

நமது சைவ சமயத்திற்கு வித்தாக உள்ள திருஞானசம்பந்தர் அருளிய ''கோளறு பதிகம்'' பண் பியந்தைக் காந்தாரம் வகையில் இயற்றப்பட்டதை நான் இங்கு நினைவு கூற விரும்புகின்றேன்.

''வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்

**pdfMachine**
**Is a pdf writer that produces quality PDF files with ease!**
Produce quality PDF files in seconds and preserve the integrity of your original documents. Compatible across nearly all Windows platforms, if you can print from a windows application you can use pdfMachine.
Get yours now!

ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே'' என்று முதல் பாடலில் கூறுகின்றார்கள்.

கடைசியாக உள்ள 10 பாடலில்
..............தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரை செய்
ஆனசொல் மாலை ஓதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே.

நாம் இந்த கட்டுரையின் மூலம் தெரிந்துகொள்வது யாதெனில், முருகனின் திருவடியை மனமுருகி நினைப்பவர்களுக்கு நாளும், கோள்களும் நிச்சயம் நல்லது செய்யும். இது எப்படி என்றால் நமக்கு துன்பம் தரக்கூடிய அந்த கோளை, மற்றொரு கோள் (உதராணமாக குரு) மற்றொரு கட்டத்தில் இருந்து பார்க்கும் போது அந்த துன்பச் செயல் நடக்காது என்று நம்முடைய ஜோதிடம் கூறுகின்றது. நமக்கு ஏற்பட இருந்த துன்பத்தை இந்த கோள் தடுத்துவிடுவதால் நமக்கு அந்த துன்பச் செயல் நடப்பது இல்லை. இவ்வாறு தடுப்பதற்கு அந்த கோள் உதவி செய்வதற்கு ஞானியர்கள் இயற்றிய இந்த பாடல்கள் தான் நமக்கு நிச்சயம் உதவும்.

**pdfMachine**
**Is a pdf writer that produces quality PDF files with ease!**
Produce quality PDF files in seconds and preserve the integrity of your original documents. Compatible across nearly all Windows platforms, if you can print from a windows application you can use pdfMachine.
Get yours now!